சொர்க்கத்திற்கு இட்டுச்செல்லும் காரணிகள்

சொர்க்கத்திற்கு இட்டுச்செல்லும் 50 காரணிகள்

1, 2- ஈமான் மற்றும் நல்லமல்கள்:

எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்காரியங்களைச் செய்தார்களோ அவர்கள் சொர்க்கவாசிகள்! அவர்கள் அதில் நிரந்தரமானவர்கள்.

திருக்குர்ஆன்- 2:82

3- தக்வா:

நிச்சயமாக, அல்லாஹ்வை அஞ்சியவர்கள் சொர்க்கங்களிலும் (அவற்றில் உள்ள) நீரருவிகளிலும் இருப்பார்கள்.

திருக்குர்ஆன் - 15:45

உங்கள் இறைவனின் மன்னிப்பு இன்னும், சொர்க்கத்தின் பக்கம் விரையுங்கள். அதன் அகலம் வானங்களும் பூமியுமாகும். (அது) அல்லாஹ்வை அஞ்சுபவர்களுக்கு தயார்படுத்தப்பட்டுள்ளது.

திருக்குர்ஆன்- 3:133

மக்களை அதிகம் சொர்க்கத்தில் நுழையச்செய்கின்ற காரியம் எது? என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “இறையச்சமும், நற்குணமும்” என்று பதிலளித்தார்கள்.

மக்களை அதிகம் நரகத்தில் நுழையச்செய்கின்ற காரியம் எது? என்று கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “வாயும், மர்ம உறுப்பும்” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி)
நூல்: திர்மிதி: 2004, அஹாதீஸு ஸில்ஸிலதிஸ் ஸஹீஹா- 977
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

4- அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் உறுதியாக நிலைத்து இருத்தல்:

எவர்கள், எங்கள் இறைவன் அல்லாஹ்தான் என்று கூறி (அவன் அருள்புரிந்த இவ்வேதத்தை நம்பிக்கை கொண்டு,) அதில் உறுதியாகவும் இருக்கிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக ஒரு பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

திருக்குர்ஆன்- 46:13

நான் "அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாம் குறித்து (சுருக்கமாக) எனக்கு ஒரு விளக்கம் அளியுங்கள். "தங்களுக்குப் பிறகு யாரிடமும்" அல்லது "தங்களைத் தவிர வேறு யாரிடமும்" அது குறித்து நான் கேட்க வேண்டிய திருக்கலாகாது" என்று வினவினேன்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ""அல்லாஹ்வின் மீது நான் நம்பிக்கை கொண்டேன்" என்று கூறி, அதில் உறுதியாக நிலைத்து நிற்பீராக!" என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர்: சுஃப்யான் பின் அப்தில்லாஹ் அஸ்ஸகஃபீ (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் : 62

5- அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்படுதல்:

அன்றியும், எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்படுகிறாரோ, அவரை (அல்லாஹ்) சுவர்க்கங்களில் பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; ஆனால் எவன் பின் வாங்குகிறானோ, அவனை (அல்லாஹ்) நோவினை தரும் வேதனையாக வேதனை செய்வான்.

திருக்குர்ஆன் - 48:17

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(ஒரு முறை) இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'என் சமுதாயத்தார் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள்; ஏற்க மறுத்தவரைத் தவிர' என்று கூறினார்கள். மக்கள், 'இறைத்தூதர் அவர்களே! ஏற்க மறுத்தவர் யார்?' என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், 'எனக்குக் கீழ்ப்படிந்தவர் சொர்க்கம் புகுவார்; எனக்கு மாறு செய்தவர் (சத்தியத்தை) ஏற்க மறுத்தவராவார்' என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி)
நூல்: ஸஹீஹ் புகாரி : 7280

6- அல்லாஹ்வின் திருநாமங்களை அறிந்து அதன் மீது நம்பிக்கை வைத்து அதை நினைவில் வைத்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வுக்கு நூறில் ஒன்று போக தொண்ணூற்றொன்பது திருப்பெயர்கள் உள்ளன. அவற்றை அறிந்து (அதன் மீது நம்பிக்கை வைத்து அதை நினைவில்) கொள்பவர் சொர்க்கத்தில் நுழைவார்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி)
நூல்: ஸஹீஹ் புகாரி- 2736

7- தவ்பா:

தவ்பா செய்து, (பாவங்களிலிருந்து விலகி) ஈமான் கொண்டு, (ஸாலிஹான) - நல்ல - செயல்களைச் செய்கிறார்களே அவர்களைத் தவிர; அத்தகைய (ஸாலிஹான)வர்கள்; (ஜன்னத்தில்) - சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள்; (அவர்கள் அடைய வேண்டிய நற்பயன்) எதிலும் அவர்களுக்குக் குறைவு செய்யப்பட மாட்டாது.

திருக்குர்ஆன்- 19:60

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் பாவங்களிலிருந்து தவ்பா செய்தாரோ, அவர் பாவமே செய்யாதவரைப் போலாவர், என்று நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி)
நூல்: இப்னு மாஜா- 4250, ஸஹீஹுல் ஜாமிஃ -3008
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

8- கடமைகளை முறையாக கடைப்பிடித்தல்:

(நஜ்துப் பகுதியைச் சேர்ந்த) கிராமவாசி ஒருவர் தலைவிரி கோலத்துடன் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் என் மீது கடமையாக்கியுள்ள தொழுகை பற்றிக் கூறுங்கள்' என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், '(நாளொன்றுக்கு) ஐவேளை தொழுகைகள் (உன் மீது கடமையாகும்); நீயாக விரும்பிக் கூடுதலாக ஏதேனும் தொழுது கொண்டால் தவிர' என்றார்கள். அவர், 'அல்லாஹ் என் மீது கடமையாக்கியுள்ள நோன்பு பற்றிக் கூறுங்கள்' என்றார். நபி(ஸல்) அவர்கள், 'ரமளான் மாதம் முழுவதும் நீ நோன்பு நோற்பது உன் மீது கடமையாகும்); நீயாக விரும்பிக் கூடுதலாக ஏதேனும் நோன்பு நோற்றால் தவிர' என்றார்கள். தொடர்ந்து அவர், அல்லாஹ் என் மீது கடமையாக்கியுள்ள ஸகாத் பற்றிக் கூறுங்கள்' என்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள் (ஸகாத் உள்பட) இஸ்லாமிய சன்மார்க்க நெறிகளை அவருக்குத் தெரிவித்தார்கள். அவர், 'உங்களைக் கண்ணியப்படுத்திய(இறை)வன் மீது சத்தியமாக! நான் (இவற்றில்) எதனையும் கூடுதலாகச் செய்யமாட்டேன். அல்லாஹ் என் மீது கடமையாக்கியுள்ளவற்றில் எதனையும் நான் குறைக்கவுமாட்டேன்' என்று கூறிவிட்டுத் திரும்பிச் செல்லலா)னார். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'இவர் (தாம் கூறியபடி) உண்மையாக நடந்தால் 'வெற்றியடைவார்' அல்லது இவர் (கூறியபடி) உண்மையாக நடந்தால் சொர்க்கத்தில் நுழைவார்' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: தல்ஹா இப்னு உபைதில்லாஹ்(ரலி)
நூல்: ஸஹீஹ் புகாரி - 6956

9- (மார்க்கத்தில்) அனுமதிக்கப்பட்டவற்றை அனுமதிக்கப்பட்டவை என்றும் விலக்கப்பட்டவற்றை விலக்கப்பட்டவை என்றும் ஏற்று வாழ்தல்:

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், கடமையான தொழுகைகளை நான் தொழுது, ரமளான் மாதத்தில் நோன்பு நோற்று, (மார்க்கத்தில்) அனுமதிக்கப்பட்டவற்றை அனுமதிக்கப்பட்டவை என்றும் விலக்கப்பட்டவற்றை விலக்கப்பட்டவை என்றும் ஏற்று வாழ்ந்து, இவற்றைவிட வேறெதையும் அதிகமாகச் செய்யாவிட்டாலும் நான் சொர்க்கத்தில் நுழைந்துவிடுவேனா?" என்று கேட்டார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஆம்" என்றார்கள். அந்த மனிதர் அல்லாஹ்வின் மீதாணையாக! இவற்றைவிட வேறெதையும் நான் அதிகமாகச் செய்யமாட்டேன்" என்று கூறினார்.

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் - 18

10- அல்லாஹ்வுடைய திருமுகத்தை நாடி மார்க்கக்கல்வியை தேடுதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன் மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான். மக்கள் இறையில்லங்களில் ஒன்றில் ஒன்றுகூடி, அல்லாஹ்வின் வேதத்தை ஓதிக்கொண்டும் அதை ஒருவருக்கொருவர் படித்துக்கொடுத்துக் கொண்டும் இருந்தால், அவர்கள்மீது அமைதி இறங்குகிறது. அவர்களை இறையருள் போர்த்திக்கொள்கிறது. அவர்களை வானவர்கள் சூழ்ந்துகொள்கின்றனர். மேலும் இறைவன், அவர்களைக் குறித்துத் தம்மிடம் இருப்போரிடம் (பெருமையுடன்) நினைவுகூருகிறான்.அறச் செயல்களில் பின்தங்கிவிட்ட ஒருவரைக் குலச்சிறப்பு முன்னுக்குக் கொண்டு வந்துவிடுவதில்லை.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் : 5231

11- அல்லாஹ்வுடைய பாதையில் போர்செய்தல்:

(நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களின் உயிர்களையும், பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் இருக்கிறது என்ற (அடிப்படையில்) விலைக்கு வாங்கிக் கொண்டான்; அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள் - அப்போது அவர்கள் (எதிரிகளை), வெட்டுகிறார்கள்; (எதிரிகளால்) வெட்டவும் படுகிறார்கள். தவ்ராத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் இதைத் திட்டமாக்கிய நிலையில் வாக்களித்துள்ளான்.

திருக்குர்ஆன்- 9:111

ஈமான் கொண்டவர்களே! நோவினை செய்யும் வேதனையிலிருந்து உங்களை ஈடேற்றவல்ல ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அது) நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர் மீதும் ஈமான் கொண்டு, உங்கள் பொருள்களையும், உங்கள் உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது (அறப்போர்) செய்வதாகும்; நீங்கள் அறிபவர்களாக இருப்பின், இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும். அவன் உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான்; சுவனபதிகளில் உங்களை பிரவேசிக்கச் செய்வான்; அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அன்றியும், நிலையான அத்னு என்னும் சுவர்க்கச் சோலைகளின் மணம் பொருந்திய இருப்பிடங்களும் (உங்களுக்கு) உண்டு; இதுவே மகத்தான பாக்கியமாகும்.

திருக்குர்ஆன் - 61:10-12

12- தன் செல்வத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும் போது கொல்லப்படுதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

தன் செல்வத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும் போது அநியாயமாகக் கொல்லப்பட்டவருக்கு சொர்க்கம் கிடைக்கும்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)
நூல்: : நஸாயீ – 4086
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

13- நற்குணங்கள்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"எவர் தனது பண்புகளை அழகுடையதாக ஆக்கிக் கொண்டாரோ அவருக்கு சுவர்க்கத்தின் மேலிருக்கும் வீட்டை பெற்றுக் கொடுப்பதற்கு நான் பொருப்புடையவனாவேன்"

அறிவிப்பவர்: அபூ உமாமா அல்பாஹிலீ (ரலி)
நூல்: அபூதாவூத்- 4800, ஸஹீஹுல் ஜாமிஃ – 1464
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

மக்களை அதிகம் சொர்க்கத்தில் நுழையச்செய்கின்ற காரியம் எது? என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “இறையச்சமும், நற்குணமும்” என்று பதிலளித்தார்கள்.

மக்களை அதிகம் நரகத்தில் நுழையச்செய்கின்ற காரியம் எது? என்று கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “வாயும், மர்ம உறுப்பும்” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: திர்மிதி: 2004, அஹாதீஸு ஸில்ஸிலதிஸ் ஸஹீஹா- 977
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

"இறைநம்பிக்கையாளர்களின் அன்னையே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் குணத்தைப் பற்றிக் கூறுங்கள்!" எனக் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், "நீர் குர்ஆனை ஓதவில்லையா?" என்று கேட்டார்கள். நான் "ஆம் (ஓதியிருக்கிறேன்)" என்றேன். ஆயிஷா (ரலி) அவர்கள்,

"நபி (ஸல்) அவர்களின் குணம் குர்ஆனாகவே இருந்தது" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: சஅத் (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் - 1357

மேலும், (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்.

திருக்குர்ஆன் 68:2

14- நாவையும், மர்ம உறுப்பையும் பேணி பாதுகாத்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

தம் இரண்டு தாடைகளுக்கு இடையே உள்ளத(நாவி)ற்கும், தம் இரண்டு கால்களுக்கு இடையே உள்ளத(மர்ம உறுப்பி)ற்கும் என்னிடம் உத்தரவாதம் அளிப்பவருககு நான் சொர்க்கத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறேன்.

அறிவிப்பவர்: ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரலி)
நூல்: ஸஹீஹுல் புஹாரி – 6474

15- <u>தர்க்கத்தை தவிர்த்து கொள்ளல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"எவர் தனக்கு தர்க்கம் புரியும் உரிமை இருந்தும் அதனைத் தவிர்த்து கொண்டாரோ அவருக்கு சுவர்க்கத்தின் ஓரத்திலுள்ள வீட்டை பெற்றுக் கொடுப்பதற்கு நான் பொருப்புடையவனாவேன்."

அறிவிப்பவர்: அபூ உமாமா அல்பாஹிலீ (ரலி)
நூல்: அபூதாவூத்- 4800, ஸஹீஹுல் ஜாமிஃ – 1464
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

16- <u>உண்மையை பேசுதல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உண்மையே பேசுங்கள். உண்மை நன்மைக்கு வழிகாட்டும். நன்மை சொர்க்கத்திற்கு வழிகாட்டும். ஒரு மனிதர் உண்மை பேசிக்கொண்டே இருப்பார்; அதை தேர்ந்தெடுத்துப் பேசிவருவார். இறுதியில் அல்லாஹ்விடம் "வாய்மையாளர்" (ஸித்தீக்) எனப் பதிவு செய்யப்பட்டுவிடுவார்.

பொய் பேசாதீர்கள். பொய் தீமைக்கு வழி வகுக்கும். தீமை நரக நெருப்புக்கு வழி வகுக்கும். ஒரு மனிதர் பொய் பேசிக்கொண்டே இருப்பார்; அதைத் தேர்ந்தெடுத்துப் பேசிவருவார். இறுதியில் அல்லாஹ்விடம் "பொய்யர்" எனப் பதிவு செய்யப்பட்டுவிடுவார்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் - 5083

17- <u>பரிகாசத்திற்கேனும் பொய் பேசுவதைத் தவிர்த்து கொள்ளல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"விளையாட்டாகக் கூடப் பொய் பேசுவதை தவிர்த்தவருக்கு சொர்க்கத்தின் மத்திய பகுதியில் ஒரு வீட்டை பெற்றுக் கொடுப்பதற்கு நான் பொருப்புடையவனாவேன்."

அறிவிப்பவர்: அபூ உமாமா அல்பாஹிலீ (ரலி)
நூல்: அபூதாவூத்- 4800, ஸஹீஹுல் ஜாமிஃ – 1464
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

18- இரக்க சிந்தனை:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஒரு நாய் தாகத்தின் காரணமாக ஈர மண்ணை (நக்கி) சாப்பிடுவதை ஒருவர் பார்த்தார். உடனே அவர், தான் அணிந்திருந்த காலுறையை எடுத்து அதில் தண்ணீர் மொண்டு அந்நாய் தாகம் தீரும் வரை கொடுத்தார். எனவே அல்லாஹ் அம்மனிதருக்கு கருணை காட்டி அவரைச் சுவர்க்கத்தில் புகுத்தினான்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் புகாரி – 173

19- கோபத்தை மென்று விழுங்குதல் (அடக்கிக் கொள்ளுதல்):

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

யார் தமது கோபத்தைச் செயல்படுத்த சக்தி பெற்றிருந்தும் அதை மென்று விழுங்கிவிடுகிறாரோ அவரை, அல்லாஹ் மறுமைநாளில் படைப்பினங்களுக்கு முன்னால் அழைப்பான்; (ஹூருல் ஈன் எனும்) சொர்க்கக் கன்னிகளில் அவர் விரும்பும் யாரையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள அவருக்கு உரிமை அளிப்பான்.

அறிவிப்பவர்: முஆத் பின் அனஸ் அல்ஜுஹனீ (ரலி)
நூல்: திர்மிதி- 2021
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

20- பெற்றோர்களை பேணுதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள்

மூக்கு மண்ணைக் கவ்வட்டும்; பிறகும் மூக்கு மண்ணைக் கவ்வட்டும்; பிறகும் மூக்கு மண்ணைக் கவ்வட்டும்" என்று கூறினார்கள். "யார் (மூக்கு), அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "தம் பெற்றோரில் ஒருவரையோ அல்லது அவர்கள் இருவரையுமோ முதுமைப் பருவத்தில் அடைந்தும் (அவர்களுக்கு உடலாலும் பொருளாலும் ஊழியம் செய்து, அதன் மூலம்) சொர்க்கம் செல்லத் தவறியவரின் (மூக்குத் தான்)" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் – 4987

21- தந்தையிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

தந்தை, (தம் பிள்ளைகளுக்குச்) சொர்க்கத்தின் முதன்மையான வாயில் ஆவார். எனவே, விரும்பினால் அந்த வாயிலை நீ பாழாக்கலாம்; அல்லது அதைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

அறிவிப்பவர்: அபுத்தர்தா (ரலி)
நூல்: இப்னு மாஜா – 3663
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

22- பிரிந்து வாழும் உறவினர்களுடன் இணைந்து வாழுதல்:

ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! என்னை சொர்க்கத்தில் நுழையச் செய்யும் ஒரு அமலை எனக்கு அறிவியுங்கள்! என்று கேட்டார். அதற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

நீர் மிகச் சிறிய வார்த்தையைக் கூறினாலும் நிச்சயமாக மிகப் பெரிய செய்தியைக் கேட்டுவிட்டீர்!

ஜீவன்களை உரிமை விடு! அடிமையை உரிமை விடு! என்றார்கள். அதற்கவர், இவ்விரண்டும் ஒன்றில்லையா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், இல்லை, ஜீவன்களை உரிமை விடுவதென்பது நீ தனிப்பட்ட ரீதியில் அடிமையை உரிமை விடுவதாகும். ஃபக்குர் ரகபா என்பது அடிமை விடுதலை பெற அதற்குரிய கிரயத்தை நீ கொடுப்பதாகும். மேலும்பால் கொடுக்கும் கால்நடைகளை பிறருக்குக் கொடு! **பிரிந்து வாழும் உறவினர்களுடன் இணைந்து வாழவேண்டும்.** இதனைச் செய்ய உமக்கு சக்தியில்லை என்றால் பசித்தவருக்கு உணவளி! தாகித்தவருக்கு தண்ணீர் புகட்டு! நன்மையை ஏவு! தீமையைத் தடு! இதற்கும் நீர் சக்தி பெறவில்லை என்றால் நன்மையைத் தவிர வேறு எதனையும் பேசாதவாறு உனது நாவை காத்துக் கொள்!

அறிவிப்பவர்: அல்பராஉ பின் ஆஸிப் (ரலி)
நூல்: முஸ்னத் அஹ்மத் – 18647, ஸஹீஹ் தர்ஃகீப் – 1898
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்) , ஷுஐப் அர்னாவூத் (ரஹ்)

23- ஸலாத்தை பரப்புதல், ஏழைகளுக்கு உணவளித்தல், உறவை பேணுதல், இரவில் நின்று வணங்குதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

மனிதர்களே! நீங்கள் உங்களுக்கு மத்தியில் ஸலாத்தைப் பரப்புங்கள், பசித்தோருக்கு உணவு கொடுங்கள், உறவை பேணுங்கள் இன்னும் மனிதர்கள் உறங்கும் வேளையில் தொழுவீர்கள் என்றால் சுவனத்தில் சாந்தியுடனும், சமாதானத்துடனும் நுழைவீர்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி)
நூல்: இப்னுமாஜா – 3251
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

24- தொல்லை தரும் பொருட்களைப் பாதையிலிருந்து அகற்றுதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஒரு மனிதர் நடுவழியில் கிடந்து மக்களுக்கு இடையூறு அளித்துவந்த மரமொன்றை வெட்டி (அப்புறப்படுத்தி)யதற்காகச் சொர்க்கத்தில் நடமாடுவதை நான் கண்டேன்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம்- 5107

25- பள்ளிவாசல்களை கட்டுதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி, பள்ளிவாசல் ஒன்றைக் கட்டியவர் அது போன்ற ஒன்றைச் சுவர்க்கத்தில் அவருக்காக அல்லாஹ் கட்டுகிறான்' என்று நபி (ஸல்) கூற செவியுற்றுள்ளேன்' என உஸ்மான் (ரலி) கூறினார்.

அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி)
நூல்: ஸஹீஹ் புகாரி : 450

26- பாங்கிற்கு பதிலளித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

தொழுகை அறிவிப்பாளர் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என்று சொன்னால் நீங்களும் அல்லாஹு அக்பர்,அல்லாஹு அக்பர் என்று சொல்லுங்கள். பின்பு அவர், அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொன்னால் நீங்களும் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லுங்கள். பின்பு அவர், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று சொன்னால் நீங்களும் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று சொல்லுங்கள். பின்பு அவர் ஹய்ய அலஸ் ஸலாஹ் என்று சொன்னால் நீங்கள் லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்(அல்லாஹ்வின் உதவியில்லாமல் (பாவங்களிலிருந்து) விலகிச்செல்லவோ (நல்லறங்கள் புரிய) ஆற்றல் பெறவோ மனிதனால் முடியாது) என்று சொல்லுங்கள். பின்பு அவர் ஹய்ய அலல் ஃபலாஹ் என்று சொன்னால் நீங்கள், லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்று சொல்லுங்கள். பின்பு அவர் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்என்று சொன்னால் நீங்களும் அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என்று சொல்லுங்கள். பின்பு அவர் லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொன்னால் நீங்களும் லா இலாஹ இல்லல்லாஹ் என்று மனப்பூர்வமாகச் சொல்லுங்கள். உங்களில் இவ்வாறு கூறுபவர் சொர்க்கத்தில் நுழைந்துவிட்டார்.

அறிவிப்பவர்: உமர் பின் அல்கத்தாப் (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் – 629

27- <u>இரவிலும் பகலிலும் உளூவுடன் இருப்பதன் சிறப்பும், அங்கசுத்தி செய்த பின் தொழுவதன் மேன்மையும்:</u>

(ஒரு நாள்) அதிகாலைத் தொழுகையின்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களிடம், "பிலாலே! இஸ்லாத்தில் இணைந்த பிறகு பயனுள்ளதாக நீர் கருதிச் செய்துவரும் நற்செயல் ஒன்றைப் பற்றிக் கூறுவீராக. ஏனெனில், சொர்க்கத்தில் உமது காலணி ஓசையை எனக்கு முன்னால் நான் செவியுற்றேன்" என்று சொன்னார்கள்.

அதற்கு பிலால் (ரலி) அவர்கள், "நான் இஸ்லாத்தில் இணைந்தபிறகு பயனுள்ளதாகக் கருதி அப்படி (பிரமாதமாக) எந்த நற்செயலையும் செய்யவில்லை. ஆயினும், நான் இரவிலோ பகலிலோ எந்த நேரத்தில் முழுமையாக அங்கத் தூய்மை (உளூ) செய்தாலும், அந்த அங்கத் தூய்மை மூலம் நான் தொழ வேண்டும் என அல்லாஹ் என் விஷயத்தில் விதித்துள்ள அளவுக்கு (கூடுதல் தொழுகையை)த் தொழாமல் இருந்ததில்லை. (இதுவே இஸ்லாத்தில் நான் செய்த பயனுள்ள நற்செயலாகக் கருதுகிறேன்)" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் - 4854

28- <u>உளூ செய்த பின் துஆ ஓதல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

உங்களில் ஒருவர் முழுமையான முறையில் அங்கத் தூய்மை செய்துவிட்டு, அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரசூலுஹு (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் உறுதிமொழிகிறேன்) என்று கூறினால், சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் அவருக்காகத் திறக்கப்படுகின்றன.அவற்றில் தாம் நாடிய வாசலில் அவர் நுழைந்துகொள்ளலாம்.

அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் - 397

29- <u>தொழுகையை நிறைவேற்றுவதற்காக பள்ளிக்கு செல்லுதல் மற்றும் அங்கிருந்து திரும்புதல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பள்ளிவாசலுக்கு ஒருவர் காலையிலோ மாலையிலோ சென்றால், அவர் காலையிலும் மாலையிலும் செல்லும் போதெல்லாம் சுவர்க்கத்தில் அவருக்கு உரிய இடத்தை அல்லாஹ் தயார் செய்கிறான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் புகாரி - 662

30- <u>ஒவ்வொரு நாளும் அல்லாஹ்விற்காக உபரியான பன்னிரண்டு ரக்அத்கள் தொழுதல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

யார் ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு ரக்அத்கள் (சுன்னத்) தொழுகின்றாரோ அதற்காக அவருக்குச் சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்பப்படுகிறது.

அறிவிப்பவர்: உம்மு ஹபீபா (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் – 1319

அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தொழுது வந்த (ஃபர்ள் அல்லாத) கூடுதலான தொழுகைகளைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது வீட்டில் லுஹரு(டைய ஃபர்ளு)க்கு முன் நான்கு ரக்அத்கள் (சுன்னத்) தொழுவார்கள். பிறகு புறப்பட்டுச் சென்று மக்களுக்கு (ஃபர்ள்) தொழுவிப்பார்கள். பிறகு வீட்டுக்கு வந்து இரண்டு ரக்அத்கள் (சுன்னத்) தொழுவார்கள்; மக்களுக்கு மஃக்ரிப் (உடைய ஃபர்ள்) தொழுவித்துவிட்டு (வீட்டுக்கு) வந்து இரண்டு ரக்அத் (சுன்னத்) தொழுவார்கள்; மக்களுக்கு இஷாத் தொழுவித்துவிட்டு எனது வீட்டுக்கு வந்து இரண்டு ரக்அத்கள் (சுன்னத்) தொழுவார்கள்; இரவில் ஒன்பது ரக்அத்கள் (நஃபில்) தொழுவார்கள். அவற்றில் வித்ர் தொழுகையும் அடங்கும்; இரவில் நீண்ட நேரம் நின்றும் தொழுவார்கள்; இரவில் நீண்ட நேரம் அமர்ந்தபடியும் தொழுவார்கள். நின்று ஓதித் தொழும்போது நிலையிலிருந்தே ருகூஉ மற்றும் சஜ்தாவுக்குச் செல்வார்கள். உட்கார்ந்து ஓதித் தொழும்போது உட்கார்ந்தபடியே ருகூஉ மற்றும் சஜ்தாச் செய்வார்கள்; ஃபஜ்ர் நேரம் வந்து விட்டால் (முன் சுன்னத்) இரண்டு ரக்அத்கள் தொழுவார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் – 1323

31- அல்லாஹ்விற்காக சஜ்தாவை(தொழுகையை) அதிகரித்தல்:

(ஒரு நாள்) நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் தங்கியிருந்தேன். அவர்கள் (இரவுத் தொழுகைக்காக எழுந்தபோது) இயற்கைக்கடனை நிறைவேற்றி(ய பின் துப்புரவு செய்து) கொள்வதற்கும் அங்கத் தூய்மை (உளூ) செய்துகொள்வதற்கும் தண்ணீர் கொண்டு சென்றேன். அப்போது அவர்கள் என்னிடம் (ஏதேனும்) கோருவீராக! என்று என்னிடம் கூறினார்கள். உடனே நான், சொர்க்கத்தில் நான் உங்களுடன் இருக்க வேண்டும் என்று கோருகிறேன் என்றேன். அதற்கு வேறு ஏதேனும் (கோருவீராக!) என்றார்கள். நான் (இல்லை) அதுதான் என்றேன். அதற்கு அவர்கள், அப்படியானால் உமது கோரிக்கை நிறைவேற அதிகமாகச் சஜ்தா செய்து எனக்கு உதவுவீராக! என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர்: ரபீஆ பின் கஅப் அல்அஸ்லமீ (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் - 843

32- கடமையான ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஆயத்துல் குர்ஸியை ஓதுதல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

கடமையான ஒவ்வொரு தொழுகைக்கும் பிறகு யார் ஆயத்துல் குர்ஸியை ஓதுகின்றாரோ அவர் சொர்க்கம் செல்வதற்கு மரணத்தைத் தவிர வேறொன்றும் தடையாக இருப்பதில்லை.

அறிவிப்பவர்: அபூ உமாமா (ரலி)
நூல்: நஸாயீ / அஸ்-ஸுனன் அல்-குப்ரா - 9532 , அஹாதீஸு ஸில்ஸிலதிஸ் ஸஹீஹா – 972

33- இரண்டு நற்குணங்களை கடைப்பிடித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

இரண்டு நற்குணங்களை அல்லது இரண்டு நற்செயல்களை வழமையாக கடைப்பிடித்து வரும் முஸ்லிமான அடியார் கண்டிப்பாக சுவர்க்கத்தில் நுழைவார். அவ்விரண்டு நற்செயல்களும் (கடைப்பிடித்துவர) எளிதானவை தான். ஆனால் அதன்படி செயல்படுபவர்கள் குறைவானவர்களே!

(அவ்விரண்டில் முதல் நற்செயல்) அவர் ஒவ்வொரு கடமையான தொழுகைக்குப் பின்பும் ஸுப்ஹானல்லாஹ் 10-பத்து தடவையும், அல்ஹம்துலில்லாஹ் 10-பத்து தடவையும், அல்லாஹு அக்பர் 10-பத்து தடவையும் கூறுவதாகும்.

இவைகள் (ஐந்து நேர தொழுகையின் மொத்த எண்ணிக்கை, நாவில் மொழிவதின்படி 150-நூற்றி ஐம்பது ஆகும். (நன்மை, தீமை நிறுக்கப்படும்) தராசில் (ஒரு நன்மைக்கு பத்து என்ற கணக்கின்படி) 1500-ஆயிரத்தி ஐநூறு நன்மைகளாகும்.

(அவ்விரண்டில் இரண்டாவது நற்செயல்) அவர் (இரவு) படுக்கையில் அல்லாஹு அக்பர் 34-தடவையும், அல்ஹம்துலில்லாஹ் 33-தடவையும், ஸுப்ஹானல்லாஹ் 33-தடவையும் கூறுவதாகும்.

இவைகள் நாவில் நூறு தடவையாகும். (நன்மை, தீமை நிறுக்கப்படும்) தராசில் 1000-ஆயிரம் நன்மைகளாகும் (ஆக மொத்த நன்மைகள் 2500-இரண்டாயிரத்தி ஐநூறு நன்மைகளாகும்) என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(இதை அறிவித்த அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், தஸ்பீஹ் செய்யும் போது அதை கை(விரல்களால்) எண்ணி செய்வதை பார்த்துள்ளேன் என்று கூறினார்கள்)

நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! இவ்விரண்டு நற்செயல்களை செய்வது எளிதாக இருந்தும், இதை கடைப்பிடிப்பவர்கள் குறைவானர்கள் தான் என்று எப்படி நீங்கள் கூறுகின்றீர்கள்? என்று கேட்டனர்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “உங்களில் ஒருவர் படுக்கைக்கு செல்லும் போது அவர் தஸ்பீஹ்களை கூறுவதற்கு முன் ஷைத்தான் அவரை தூங்கச் செய்து விடுவான். அவர் தொழுகையில் இருக்கும் போது தஸ்பீஹ்களை கூறுவதற்கு முன் ஷைத்தான் அவரிடம் வந்து ‘உனக்கு இன்னின்ன தேவைகள் உள்ளன என்று நினைவுபடுத்துவான்” என்று கூறினார்கள். (இறுதியில் அவர் தொழுகை முடிந்து மேற்கண்ட தஸ்பீஹ்களை ஓதாமல் சென்று விடுவார்).

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)
நூல்: அபுதாவூத் – 5065
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

34- <u>பாவமன்னிப்பு கோருவதில் தலையாய துஆ</u>:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

اللَّهُمَّ أَنْتَ رَبِّي، لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوءُ لَكَ بِذَنْبِي، فَاغْفِرْ لِي، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ

என்று ஒருவர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.

பொருள்: அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.

இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறப்பவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார் .இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்துவிடுகிறவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்.

அறிவிப்பவர்: ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி)
நூல்: ஸஹீஹுல் புஹாரி – 6306

35- <u>அல்லாஹ்விடம் சொர்க்கத்தை மூன்று முறை கேட்டல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஒருவர், அல்லாஹ்விடம் மூன்று தடவை சொர்க்கத்தை கேட்டு பிரார்த்தித்தால், அல்லாஹ்வே! இவரை சொர்க்கத்தில் நுழையச் செய்துவிடுவாயாக! என்று சொர்க்கம் கூறுகிறது.

ஒருவர், (அல்லாஹ்விடம்) மூன்று தடவை நரகத்தை விட்டும் காப்பாற்றும்படி பிரார்த்தித்தால், அல்லாஹ்வே! இவரை நரகை விட்டும் காப்பாற்றுவாயாக! என்று நரகம் கூறுகிறது.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் (ரலி)
நூல்: திர்மிதீ- 2572
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

36- நற்செயல்களின் தொகுப்பு ஒரு முஸ்லிமுடைய வாழ்கையில் ஒரே நாளில் இணைந்தால், அல்லாஹ்வின் அருளின் மூலம் அவர் சுவர்க்கத்தில் நுழைவார்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

(ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (எங்களிடம்), "இன்று உங்களில் நோன்பு நோற்றிருப்பவர் யார்?" என்று கேட்டார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் "நான்" என்றார்கள். "இன்றைய தினம் உங்களில் ஜனாஸாவை (பிரேதம்) பின்தொடர்ந்து சென்றவர் யார்?" என்று கேட்டார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் "நான்" என்றார்கள். "இன்றைய தினம் ஓர் ஏழைக்கு உணவளித்தவர் உங்களில் யார்?" என்று அவர்கள் கேட்க, அதற்கும் அபூபக்ர் (ரலி) அவர்கள் "நான்" என்றார்கள். "இன்றைய தினம் ஒரு நோயாளியை உடல் நலம் விசாரித்தவர் உங்களில் யார்?" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்க, அதற்கும் அபூபக்ர் (ரலி) அவர்கள் "நான்" என்றார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "எந்த மனிதர் (நல்லறங்களான) இவை அனைத்தையும் மொத்தமாகச் செய்தாரோ அவர் சொர்க்கத்தில் நுழையாமல் இருப்பதில்லை.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் – 1865

37- அல்லாஹ்விற்காக ஒரு நோயாளியையோ (அ) சகோதரனையோ சந்தித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

யாரோருவர் அல்லாஹ்விற்காக ஒரு நோயாளியை அல்லது தன்னுடைய சகோதரனை சந்திக்கிறாரோ, அவரை அழைப்பவர்(வானவர்) அழைத்து "உங்களுக்கு நன்மை உண்டாகட்டும், உங்களின் வாழ்வு வளமாகட்டும், மேலும் உங்களுடைய தங்குமிடம் சொர்க்கமாக இருக்கட்டும்" என்று கூறுவார்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)

நூல்: திர்மிதீ – 2008
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

நோயாளியை நலம் விசாரிக்கச் சென்றவர் திரும்பி வரும்வரை சொர்க்கத்தின் கனிகளைப் பறித்துக்கொண்டேயிருக்கிறார்

அறிவிப்பவர்: ஸவ்பான் (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் – 5018

38- இறந்த ஒரு முஸ்லிமுடைய ஜனாஸாவிற்கு கஃபன் ஆடை அணிவித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஒரு முஸ்லிமைக் குளிப்பாட்டுபவர் அவரிடம் உள்ள குறைகளை மறைத்தால் அவரை அல்லாஹ் நாற்பது தடவை மன்னிக்கிறான்;

அவரை அடக்கம் செய்ய (கப்ர்) குழி தோண்டி அதில் அடக்கம் செய்தால் அவர் மறுமை நாளில் எழுப்பப்படும் வரை அவருக்காக தங்குமிடத்தை ஏற்படுத்தியவருக்கு கிடைப்பதைப் போன்ற கூலியை அவர் கொடுக்கப்படுவார்;

இறந்த மனிதருக்கு கஃபன் ஆடை அணிவிப்பவருக்கு அல்லாஹ் மறுமையில் சொர்க்கத்தின் ஸுன்துஸ், இஸ்தப்ரக் எனும் பச்சைப் பட்டாடைகளை அணிவிக்கிறான்.

அறிவிப்பவர்: அபூ ராஃபிவு (ரலி)
நூல்: குப்ரா பைஹகி – 6655, அஹ்காமுல் ஜனாயிஸ்- 69
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

39- ஒரு ஜோடிப் பொருட்களை இறைவழியில் செலவு செய்தல், தொழுகை, ஜிஹாத், நோன்பு, ஸதகா ஆகியவற்றின் சொர்க்க வாசல்கள்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஒருவர் இறைவழியில் ஒரு ஜோடிப் பொருட்களைச் செலவு செய்தால் அவர் சொர்க்கத்தின் வாசல்களிருந்து, 'அல்லாஹ்வின் அடியாரே! இது (பெரும்) நன்மையாகும்! (இதன் வழியாகப் பிரவேசியுங்கள்!)' என்று அழைக்கப்படுவார். (தம் உலக வாழ்வின் போது) தொழுகையாளிகளாய் இருந்தவர்கள் தொழுகையின் வாசல் வழியாக அழைக்கப்படுவர்; அறப்போர் புரிந்தவர்கள் 'ஜிஹாத்' எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர்; நோன்பாளிகளாய் இருந்தவர்கள் 'ரய்யான்' எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர்; தர்மம்

செய்தவர்கள் 'சதகா' எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர்!' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அபூ பக்ர்(ரலி) 'இறைத்தூதர் அவர்களே! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! இந்த வாசல்கள் அனைத்திலிருந்தும் அழைக்கப்படும் ஒருவருக்கு எந்தத் துயரும் இல்லையே! எனவே, எவரேனும் அனைத்து வாசல்கள் வழியாகவும் அழைக்கப்படுவாரா?' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள் 'ஆம்! நீரும் அவர்களில் ஒருவராவீர் என்று நம்புகிறேன்!' என்றார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி)
நூல்: ஸஹீஹ் புகாரி – 1897

40- <u>ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்</u>:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உடலுறவு மற்றும் பாவமான செயல்களில் ஈடுபடாமல் ஒருவன் அல்லாஹ்வுக்காகவே ஹஜ் செய்தால் அவன் அவனுடைய தாய் அவனைப் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போன்று (பாவமறியாயப் பாலகனாகத்) திரும்புவான்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் புஹாரி - 1521

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை.
அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் ஜாமிஃ - 3170 , தப்ரானி – 2/198
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

41- <u>மூன்று மகள்களை அல்லது சகோதரிகளை வளர்த்து பராமரித்தல்</u>:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

யாருக்கு மூன்று மகள்கள் அல்லது மூன்று சகோதரிகள் இருந்து, அவர்கள் விஷயத்தில் அல்லாஹ்விற்கு பயந்து அவர்களை நேர்மையாக பராமரிக்கிறார்களோ, அவர்களுடன் நானும் சுவர்க்கத்தில் இவ்வாறு இருப்பேன்" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தங்களுடைய சுட்டுவிரலையும் நடுவிரலையும் காட்டினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி)
நூல்: முஸ்னத் அஹ்மத் – 12593, அஹாதீஸுஸ் ஸில்ஸிலதிஸ் ஸஹீஹா – 295
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

"யார் பெண் குழந்தைகள் இருவரை (அவர்கள் பருவம் எய்தும் வரை) பொறுப்பேற்று, கருத்தாக வளர்க்கிறாரோ அவரும் நானும் இவ்வாறு சொர்க்கத்தில் நுழைவோம்" என்று கூறிவிட்டு, தம்மிரு விரல்களை இணைத்துச் சைகை செய்தார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி)
நூல்: திர்மிதீ – 1914
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

42- குழந்தைகள் மற்றும் நெருங்கிய உறவுகளுடைய இறப்பில் நன்மையை நாடிப் பொறுமையாக இருத்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

யார் தன்னுடைய மூன்று குழந்தைகளை இழந்து நன்மையை நாடிப் பொறுமையாக இருக்கிறாரோ அவர் சொர்க்கம் நுழைவார். உடனே ஒரு பெண் எழுந்து "இரண்டு குழந்தையாக இருந்தாலுமா ?" என்று கேட்டாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் "ஆம், இரண்டு குழந்தையாக இருந்தாலும்". பின்னர் அந்த பெண் "ஒரு குழந்தைக்கும் நான் கேட்டுயிருக்க கூடாதா?" என்று கூறினாள்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி)
நூல்: நஸாயீ – 1872, ஸஹீஹுல் ஜாமிஃ – 5969
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

எந்த முஸ்லிமின் பருவமடையாத மூன்று (குழந்தைகள்) மரணித்துவிட்டதோ, அக்குழந்தைகளின் மீது அல்லாஹ் காட்டிய இரக்கத்தின் காரணத்தால் அவரை சொர்க்கத்திற்குள் நுழைய செய்வான்.

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி)
நூல்: நஸாயீ – 1873, ஸஹீஹுல் ஜாமிஃ – 5781
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

அல்லாஹ் கூறினான்: இறைநம்பிக்கையுள்ள என் அடியார், அவருக்குப் பிரியமான ஒருவரின் உயிரை நான் கைப்பற்றிவிடும்போது நன்மையை நாடிப் பொறுமை காத்தால், சொர்க்கமே அவருக்கு நான் வழங்கும் பிரதிபலனாக இருக்கும்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் புஹாரி - 6424, ஸஹீஹுல் ஜாமிஃ – 8139

43- பார்வை என்கிற அருட்கொடையை இழந்தவர் பொறுமையை கடைபிடித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

வல்லமையும் மாண்புமிக்க அல்லாஹ் கூறுகின்றான்: நான் என் அடியானின் பிரியத்திற்குரிய இரு பொருட்களை (அதாவது அவனுடைய கண்களைப்) பறித்துக்கொண்டு (அவனைச் சோதித்து)விடும் போது அவன் பொறுமை காத்து, நன்மை எதிர்ப்பார்ப்பானேயானால், அவனுக்குச் சொர்க்கத்தைத் தவிர வேறு எதையும் வெகுமதியாக அளிப்பதில் நான் திருப்தி அடைவதில்லை.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: திர்மிதீ – 2401
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

44- அநாதையை பராமரித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

நானும் அநாதையின் காப்பாளரும் சொர்க்கத்தில் இப்படி இருப்போம்' என்று கூறியபடி நபி(ஸல்) அவர்கள் தங்களின் சுட்டு விரலாலும் நடுவிரலாலும் (சற்றே இடைவெளிவிட்டு) சைகை செய்தார்கள்.

அறிவிப்பவர்: ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரலி)
நூல்: ஸஹீஹுல் புஹாரி – 6005

45- (வியாபாரத்தில்) வாங்குவதில் மற்றும் விற்பதில் பெருந்தன்மையாக நடந்து கொள்ளல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

"விற்கும்போதும் வாங்கும் போதும், (கடனை) நிறைவேற்றுகின்ற போதும், (கடனைத்) திருப்பி கேட்கின்ற போதும் யார் நளினமான முறையில் நடந்து கொண்டாரோ அத்தகைய மனிதரை மகத்துவமும் மாண்பும் கொண்ட அல்லாஹ் (மன்னித்து) சொர்க்கத்தில் நுழைய வைப்பான்".

அறிவிப்பவர்: உஸ்மான் இப்னு அஃப்பான் (ரலி)
நூல்: நஸாயீ – 4696, அஹாதீஸு ஸில்ஸிலதிஸ் ஸஹீஹா – 1181
ஹதீஸின் தரம்: ஹஸன் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)

46- சிரமப்படுவோரிடத்தில் (கடன் விஷயத்தில்) பெருந்தன்மையாக நடந்து கொள்ளல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

ஒரு மனிதர் இறந்த பின் சொர்க்கத்திற்குச் சென்றார். அப்போது அவரிடம், "நீ என்ன நற்செயல் புரிந்துள்ளாய்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "நான் மக்களிடம் கொடுக்கல் வாங்கல் செய்துவந்தேன். அப்போது சிரமப்படுவோருக்கு

அவகாசம் அளிப்பேன். காசு விஷயத்தில் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வேன்" என்று கூறினார். அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

அறிவிப்பவர்: ஹுதைஃபா (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் – 3180

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

(முற்காலத்தில்) ஒரு மனிதர் மக்களுக்குக் கடன் கொடுத்து (உதவி) வந்தார். (அதை வசூலிக்கச் சென்ற)தம் ஊழியரிடம், "(வசதியின்றிச்) சிரமப்படுபவரிடம் நீர் சென்றால் (அவரைக் கண்டுகொள்ளாமல்) மன்னித்து(க் கடனைத் தள்ளுபடி செய்து)விடு. அல்லாஹ்வும் நம்மை(க் கண்டுகொள்ளாமல்) மன்னித்துவிடக்கூடும்" என்று சொல்லி வந்தார். அவர் (இறந்த பின்) அல்லாஹ்வைச் சந்தித்தபோது (அவருடைய பிழைகளைப் பொறுத்து) அவரை அல்லாஹ் மன்னித்துவிட்டான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் முஸ்லிம் – 3183

47- <u>பெட்டை வெள்ளாட்டைப் பாலுக்காக இரவல் தருதல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

நாற்பது நல்ல காரியங்கள் உண்டு. அவற்றில் ஒன்றை, அதன் நன்மையை நாடியும், அதற்கென வாக்களிக்கப்பட்டுள்ள (சொர்க்கத்)தை உண்மையென நம்பியும் ஒருவர் கடைப்பிடித்து நடப்பாராயின், அதன் காரணத்தால் அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் புகுத்தியே தீருவான். அவற்றில் மிக உயர்ந்தது பெட்டை வெள்ளாட்டைப் பாலுக்காக இரவல் தருவதாகும்.

இதை அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவித்தார்.

அறிவிப்பாளர் ஹஸ்ஸான் இப்னு அதிய்யா(ரஹ்) கூறினார்:

பெட்டை வெள்ளாட்டைப் பாலுக்காக இரவல் தருவதையடுத்து, அதற்குக் கீழேயுள்ள நல்ல காரியங்களான சலாமுக்கு பதில் சொல்வது, தும்மியவருக்காகப் பிரார்த்திப்பது, பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருளை அகற்றுவது முதலியவற்றை நாம் எண்ணிப் பார்த்தோம். ஆனால், பதினைந்து நற்செயல்களைக் கூட நம்மால் எட்ட முடியவில்லை.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி)
நூல்: ஸஹீஹ் புகாரி – 2631

48- <u>(நோய்க்காக) சூடிட்டுக் கொள்ளமால், ஓதிப்பார்க்காமல், பறவை சகுனம் பார்க்கமல் தங்கள் இறைவன்மீதே முழு நம்பிக்கை வைத்தல்:</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

"என் சமுதாயத்தாரில் எழுபதாயிரம் பேர் எந்த விசாரணையுமின்றி சொர்க்கத்தில் நுழைவார்கள்" என்று கூறினார்கள். மக்கள், "அவர்கள் யார், அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "அவர்கள் (நோய்க்காக) சூடிட்டுக் கொள்ளமாட்டார்கள்; ஓதிப்பார்க்கமாட்டார்கள்; பறவை சகுனம் பார்க்கமாட்டார்கள்; தங்கள் இறைவன்மீதே முழு நம்பிக்கை வைப்பார்கள்" என்று கூறினார்கள்.

உடனே உக்காஷா (ரலி) அவர்கள் எழுந்து, "அவர்களில் ஒருவனாக என்னையும் ஆக்கும் படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்!" என்று சொன்னார். நபி (ஸல்) அவர்கள், "அவர்களில் நீரும் ஒருவர்தாம்" என்று சொன்னார்கள். உடனே இன்னொருவர் எழுந்து, "அவர்களில் ஒருவனாக என்னையும் ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள், நபியே!" என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள், "இந்த விஷயத்தில் உக்காஷா உம்மை முந்திவிட்டார்" என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர்: இம்ரான் பின் ஹுஸைன் (ரலி)
நூல்: ஸஹீஹ் முஸ்லிம் – 371, 372

49- மோசடி, கடன், ஆணவம் ஆகிய மூன்றும் இல்லாத நிலையில் மரணித்தல்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

மோசடி, கடன், ஆணவம் ஆகிய மூன்றும் நீங்கிய நிலையில் ஒருவரது உடலிலிருந்து உயிர் பிரிந்தால் அவர் சொர்க்கம் செல்வார்.

அறிவிப்பவர்: ஸவ்பான் (ரலி)
நூல்: முஸ்னத் அஹ்மத் – 22428, ஸஹீஹ் தர்ஃகீப் – 1798
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்) , ஷுஐப் அர்னாஊத் (ரஹ்)

50- நீதியாக தீர்ப்பு வழங்கும் நீதிபதி:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

நீதிபதிகள் மூன்று வகைப்படுவர். இருவர் நரகத்திலும், ஒருவர் சுவர்க்கத்திலும் புகுவர்.

1- நீதியை அறிந்து அதன்படி செயல்படுபவர். இவர் சுவர்க்கத்தில் புகுவார்.

2- உண்மையை அறியாமல் தன்னுடைய அறியாமையுடனேயே மக்களுக்குத் தீர்ப்பு வழங்கியவர். இவர் நரகத்தில் புகுவார்.

3- நீதியை அறிந்தும் அதன்படி தீர்ப்பளிக்காமல், தீர்ப்பில் அநீதி செய்தவர். இவர் நரகத்தில் புகுவார்.

அறிவிப்பவர்: புரைதா (ரலி
நூல்: இப்னு மாஜா – 2315
ஹதீஸின் தரம்: ஸஹீஹ் -முஹத்திஸ்: அல்பானி (ரஹ்)